**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 94/2021**

**13.03.2026.**

**DW - 1**

**பி.வா.சா.1. ரவி, த/பெ.தங்கவேல் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில், வாதியின் கணவரான சுப்ரமணியன் வலங்கைமான் கூட்டுறவு வங்கியில் 30.06.1986 ல் கடன் வாங்கியுள்ளார் என்றால் - சரிதான். அதற்கு வட்டி 10% என்றும் கெடு 9 ஆண்டுகள் என்று போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அதன்படி பார்க்கும்போது 1995 ல் அதன் காலக்கெடு முடிந்துவிட்டது என்றால் - சரிதான். அந்த கடனை அப்போதுள்ள தமிழக அரசு தள்ளுபடி செய்துவிட்டது என்றால் - சரிதான். 2007 ல் தள்ளுபடி செய்தார்கள். நான் சொல்வதுபோல 2007 ல் தள்ளுபடி செய்வதாக சொல்வது தவறு என்றாலும் 1995 ல் காலக்கெடு முடிவதற்கு முன்பே தமிழக அரசு தள்ளுபடி செய்துவிட்டது என்றாலும் - சரியல்ல. பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில், அவளிவநல்லூர் , தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ரவி த/பெ. தங்கவேல் என்று போடப்பட்டுள்ளது என்றால் -சரிதான். அதன் தேதி 15.10.2008 என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் வாதியின் பெயரோ அல்லது சர்வே எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் - சரிதான். நான் வாங்கிய கடனுக்கான ரசீதை இந்த வழக்கில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. 12.02.2008 தேதியிடப்பட்ட பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில், சுப்ரமணியனுக்காக செலுத்தியது ரவி என்று கண்டுள்ளது என்றால் - சரிதான். 01.03.2012 தேதியிட்ட பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில், கலைச்செல்விக்காக கட்டியது ரவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். 06.08.2021 தேதியிட்ட பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் கலைச்செல்வி என்று பெயரிடப்பட்டு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் - சரிதான். 08.03.2007 தேதியிடப்பட்ட பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சுப்ரமணியன் நேரடியாக செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணமானது 1424 பசலி சாகுபடி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அதே ஆவணத்தில், சிட்டா அடங்கலில் 1425 பசலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் 1424 பசலி சாகுபடி செய்ததாக குறிப்பிடப்பட்டு சிட்டா அடங்கலில் 1425 பசலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். மேற்படி ஆவணங்களில் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து மட்டும் உள்ளது தேதி போடப்படவில்லை என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில், 1426 பசலி சாகுபடி செய்ததாக குறிப்பிடப்பட்டு சிட்டா அடங்கலில் 1427 பசலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில், 1427 பசலி சாகுபடி செய்ததாக குறிப்பிடப்பட்டு சிட்டா அடங்கலில் 1428 பசலி என்று குறிப்பிடப்பட்டு தேதி குறிப்பிடாமல் உள்ளது என்றால் - சரிதான். சிட்டா அடங்கலில் காலம் 6 ல், அனுபவதாரர் / கைப்பற்றுதாரர் என்ற இடத்தில் கலைச்செல்வி பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.7 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணத்திலும் கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பம் போடப்பட்டு தேதி போடப்படவில்லை என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழில் 1423 பசலி என்று

குறிப்பிடப்பட்டு சிட்டா அடங்கலில் 1424 பசலி என்று போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில், பசலி 1429 என்றும் சிட்டா அடங்கலில் 1428 பசலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில், கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழில் 1430 பசலி என்றும் சிட்டா அடங்கலில் 1430 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழில் 26.08.2021 என்று தேதி போடப்பட்டு இரண்டு வெவ்வேறு மையினால் போடப்பட்டுள்ளது என்றால் - கையொப்பம் ஒரே மையினால் போடப்பட்டுள்ளது. ஆனால் கையெழுத்து வெவ்வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.14 ஆவணத்திலும் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் நீல நிற மையினாலும் சிட்டா அடங்கல் கருப்பு நிற மையினால் எழுதப்பட்டு நீல நிற மையினால் கையெழுத்து போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில், வாதியின் கணவர் சுப்ரமணியன் வாங்கிய ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்திற்கும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் - சரியல்ல. பி.வா.சா.ஆ.15 ஆவணமானது, வழக்கறிஞர் அறிவிப்பு வாதிக்கும் அவரது கணவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.15 க்கு அனுப்பிய பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். நான் அத்துமீறி வாதியின் சொத்தை அபகரித்துள்ளேன் என்றால் - சரியல்ல. 2003 ல் ஒப்பந்தம் போடப்பட்டு இன்றுவரை ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செயதுள்ளேனா என்றால் - இல்லை. பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில், ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் ஆனால் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். இந்த வழக்கிற்காக மோசடியான ஒரு ஆவணம் தயார் செய்ததால் தான் ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்கவில்லை என்றால் - சரியல்ல. நீதிமன்றத்தில் பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்து பரிகாரம் கேட்டுள்ளதால் எனது பரிகாரம் கேட்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN
Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 17:57:09 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.